24th March 1965]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சின்கோனுவிலிருந்து எடுக்கின்ற கொய்னுவை "சிந்தெடிக்" முறையில் மாத்திரைகளாகத் தயாரித்து வெளிநாடுகளிலிருந்து இங்கே இறக்குமதி ஆவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அந்த மாத்திரைகள் வந்த காரணத்தினுல்தான் இங்கே சின்கோனுவிலிருந்து தயாரிக்கப்படும் கொய்னு மாத்திரை விற்பனையில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்தக் கேள்வியை என்னுடைய சக அமைச்சர் கனம் அம்மையார் அவர்களுக்குப் போட வேண்டும்.

Improvement of Slums and Housing Projects (Salem)

* 314 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the schemes under consideration for improvement of Slums and for Housing Projects in Salem; and

(*b*) whether there is any proposal to locate a separate unit of the Housing Board at Salem?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A statement[a] is placed on the Table of the House.

(*b*) Salem comes under the jurisdiction of the Coimbatore Housing Unit. There is no proposal to set up a separate unit of the Housing Board at Salem. However, a section office of the Coimbatore Housing Unit is functioning at Salem.

திரு. ர. ஜீவரத்னம் : வடாற்காடு ஜில்லா தலைநகரமாகிய வேலூரிலும் சேரி ஒழிப்புப் பிரச்னை மிக முக்கியமானதாக இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது வேலூரையும் எடுத்துக்கொண்டு அங்கு சேரி ஒழிப்புத் திட்டத்தை அமல் நடத்த அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வடாற்காட்டைப் பற்றித் தனிக் கேள்வி போடும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகம் கோவையில் ஆர்ஜிதம் செய்த நிலங்கள்

* 315 கேள்வி—**திரு. எம். எஸ். மணி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவையில் தமிழ்நாட்டு வீட்டு வசதிக் கழகம் எவ்வளவு நிலங்களை வாங்கியிருக்கிறது ?

(இ) எந்தப் பகுதியில் வாங்கியிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) மேற்குக் கோவைப்புறநகர் திட்டத்திற்காக சுண்டக்காமுத்தூர் கிராமத்தில் 250·68 ஏக்கர் பரப்புள்ள நிலமும், குமாரபாளையம் கிராமத்திலே பேரூர் சாலைக்கு வடக்கிலும் தெற்கிலும் 31·72 ஏக்கர் பரப்புள்ள நிலமும் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களின் அபிவிருத்தித் திட்டத்திற்காக மேற்கொண்ட பூர்வாங்க வேலைகளைப் பற்றிய விவரங்களைக் கனம் அமைச்சர் அவர்கள் கூற முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சுமார் 280 ஏக்கர் நிலத்தை நாம் "பல்க் அக்விஸிஷன்" ஆக வாங்கிவிட்டோம். அந்த இடத்தில் "லே-அவுட்" போட்டிருக்கிறோம். ஊரூர், கோடம்பாக்கம்-புதூர்

---

a Printed as Appendix on pages 576–579 inpra.